<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : SC.No. 454/2025</u>

<u>வழக்கு சாட்சி PW-3</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ராமச்சந்திரன் | தொழில் | : | தலைமைக்காவலர் |
| கிராமம் | : | பாவூர்சத்திரம் | வயது | : | 37 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Tuesday of 16.06.2026.

**(1 முதல் 4 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது கடையம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு ஊத்துமலை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது, 24.04.2020ம் தேதி, மதியம் 15.00 மணிக்கு நானும், காவல் ஆய்வாளர், சிறப்பு உதவி ஆய்வாளர் பாக்கியராஜ், காவலர்கள் இமானுவேல்ஜெய்சிங் மற்றும் சுரேஷ் ஆகியோர் கொரோனா தொற்று சம்மந்தமாக விதிமுறை மீறல் நடவாமல் தடுக்க ரோந்து செய்து கண்காணித்து வரும்போது தங்கம்மாள்புரம் ஊருக்கு தென்புறம் உள்ள 1வது எதிரி காளிமுத்து என்பவரது தோட்டத்தில் பின்னால் விசாரித்து தெரிந்த தெற்கு பனவடலிசத்திரத்தை சேர்ந்த காளிமுத்து மற்றும் அதே ஊரை சேர்ந்த காளிமுத்து, முருகன், தங்கராஜ், தங்கமுத்து மற்றும் பாண்டியராஜ் ஆகிய ஆஜர் எதிரிகள் மண்பானையில் சாராயம் வடித்து கொண்டிருந்தார்கள். அவர்கள் எங்களை பார்த்தவுடன் ஓடினார்கள். அவர்களை பிடித்து விசாரித்தபோது, அவர்கள்

அவர்களுடைய முகவரியை சொன்னார்கள். மண்பானையில் காளிமுத்து என்ற பெயருடைய 2 பேர்களும் காய்ச்சி கொண்டிருந்தார்கள்.

3 வது எதிரி முருகன் மற்றும் 4 ம் எதிரி தங்கராஜ் ஆகிய இருவரும் மேல் பானையில் தண்ணீர் மாற்றிக்கொண்டிருந்தார்கள். 5 ம் எதிரி தங்கமுத்து என்பவர் தீயை தள்ளிக்கொண்டும், 6 ம் எதிரி பாண்டியராஜ் என்பவர் டியூப் வழியாக வடிந்த சாராயத்தை பிளாஸ்டிக் கேனில் பிடித்துக்கொண்டும் இருந்தார்கள். போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் ஓடி எழுந்தவர்களை போலீசு பார்ட்டி மடக்கி பிடித்து சம்பவயிடத்தை வந்து பார்வையிட சுமார் 35 லிட்டர் பிடிக்ககூடிய 3 வெள்ளை நிற கேன்களில் சாராயம் நெடியுடன் கூடிய சாராயமும், அதில் ஊமத்தங்காய் விதையும் மிதந்து கொண்டிருந்தது. மேற்படி எதிரிகளிடம் சாராயம் பற்றி விசாரிக்க அதிக போதைக்காக நச்சு தன்மைக்கொண்ட ஊமத்தங்காயை இடித்து போட்டிருப்பதாக தெரிவித்தார்கள். பின்பு மேற்படி கேன்களில் இருந்து தலா 750 மிலி லிட்டர் பிடிக்க கூடிய வெள்ளை நிற பாட்டிலில் தலா 500 மிலி மாதிரிக்கு எடுத்தும் கொதி உலையில் இருந்து இரு வெள்ளை நிற பாட்டிலில் தலா 500 மிலி மாதிரிக்கு எடுத்து SHO சீல் வைத்தார்.

சாராயம் வடிக்க பயன்படுத்திய மண்பானைகள் மற்றும் மீதமுள்ள சாராயத்துடன் கூடிய கேன்களை கொண்டு செல்ல போதிய வசதி இல்லாததால் அதே இடத்தில் கொட்டி அழித்து அழிமதி செய்தும், பின்பு மேற்படி பாட்டில்களை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியும், மேற்படி சம்பவயிடத்தையும் தனிநபர்கள் யாரும் இல்லாததால் போலிசு பார்ட்டியாகிய நாங்களே கையொப்பம் செய்து கைப்பற்றி எதிரிகள் மற்றும் சொத்துகள் சகிதம் நிலையம் 17.45 மணிக்கு வந்து மேற்படி எதிரிகள் மீது நிலைய

குற்ற எண். 180/2020, சட்டப்பிரிவுகள் 4(1) (b), 4(1A), 4(1)(aaa) TNP Act–ன் படி வழக்கு பதிவு செய்ய நான் காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். என்னிடம் காட்டப்படும் அசாஆ.1 அத்தாட்சியில் உள்ள 4 வது கையெழுத்து என்னுடையது தான். இது சம்மந்தமாக என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

24.04.2020 அன்று மாலை 03.00 மணிக்கு ரோந்திற்கு சென்றோம் என்றால் சரிதான். அதனை பாக்கெட் டைரியில் குறித்து கொண்டேனா? என்றால் குறித்து கொண்டேன். பாக்கெட் டைரியின் நகலை ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை. எதிரிகள் மாமரத்திற்கு அடியில் இருந்தார்களா? என்றால் மாந்தோப்பில் இருந்தார்கள். ரோட்டிலிருந்து மாந்தோப்பு எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் ஒன்றரை கி.மீ தூரத்தில் உள்ளது.

நாங்கள் ஆய்வாளரின் சுமோ வாகனத்தில் சென்றோம். ரோட்டிலிருந்து மாந்தோப்பிற்கு மண் பாதை வழியாக ஆய்வாளரின் சுமோ வாகனம் சென்றது. சம்பவயிடத்தின் அருகில் வரைக்கும் வாகனம் சென்றது. எதிரிகள் எங்களை பார்த்தார்கள் என்றால் சரிதான். நாங்கள் வருவதை பார்த்ததும், எதிரிகள் ஓடியுள்ள நிலையில் அவர்கள் தனித்தனியாக சாராயம் காய்ச்சும் ஒவ்வொரு பணியையும் செய்து கொண்டிருந்ததாக நான் கூறியுள்ளது முரண்பாடானது என்றால் சரியல்ல.

நான் சொன்ன நேரத்திலும், சொன்ன முறையில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றும், அத்தாட்சி மூலம் எவ்வித சொத்துக்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள்

மற்றும் சான்று பொருட்கள் பின் யோசனையோடு தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.19 10:30:32 +0530